## நீ என்னைக் கண்டதால் நம்பினாய், காணாமலே நம்புவோர் பேறுபெற்றோர்.

(யோவான் 20:29)




தயாரித்தவர்:
**Cynthia Fernandez**
from *Legion of Mary*

and **Fr. Paul Cheong** OFM (Cap)
EA for *Archkl Prayer Ministry*

*Edited by:*
**Fr. Eugene**
*Director*
**KL Archdiocesan Pastoral Institute (API)**

*email:*
**apidirectorkl@gmail.com**



**INTERNAL CIRCULATION ONLY**

BUL 16/2023


அப்போஸ்தலர் தோமா, “தழும்மைப் பார்த்தொலொழிய..... நான் நம்பமாட்டேன்” என்று சொன்னார். வேறுவிதமாகக் கூறுவெதென்றால், “நான் அவரைக் காண விரும்புகிறேன்” என்று கூறுகிறார். அவர் இயேசுவைக் கண்டார், வெகுமதியைப் பெற்றுக்கொண்டார். இந்தத் தேடுதல், ஒருவரின் வாழ்க்கையை உண்மை நம்பிக்கையை நோக்கித் திறக்கிறது. நம்முடைய வாழ்வின் மகிழ்ச்சியும் அமைதியும் பிறரோடுப் பகிர்ந்துகொள்ளப்பட்டு அவர்களும் இயேசுவைச் சந்திக்க உதவி செய்கிறது.

அவர்களின் அன்புச் செயல்கள், அவர்கள் காட்டிய இரக்கம், தேவையில் இருப்போரிடம் பகிர்ந்துகொண்டது, இறைவேண்டல் மற்றும் ஒன்றுகூடுதல் ஆகியவற்றால் தொடக்கக் காலத் திருஅவை ஒவ்வொருநாளும் வளர்ந்தது. ‘அப்பத்தைப் பிட்குதல்’ என்னும் நற்கருணைக் கொண்டாட்டத்தில் ஆர்வத்தோடு பங்கேற்றதால் ஒரே எண்ணமும் இரக்கம் உள்ளவர்களாகவும் மாறினார்கள். அப்போஸ்தலர்களைப் பார்த்து மக்களும் இதை அவர்களிடமிருந்துக் கற்றுக்கொண்டார்கள்.

இன்று நாம் கடவுளின் இறை இரக்கத்தின் திருநாளைக் கொண்டாடுகிறோம். நம்முடைய அனைத்து அருளடையாளங்களும் கடவுளின் இரக்கத்தைக் கொண்டாடுகின்றன. ஒப்புரவு அருளடையாளத்தின் வழியாக, நாம் மன்னிப்பைத் தேடுகிறோம். ஏனென்றால் “ எவருடைய பாவங்களை நீங்கள் மன்னிப்பீர்களோ, அவை மன்னிக்கப்படும். எவருடைய பாவங்களை மன்னியாதிருப்பீர்களோ, அவை மன்னிக்கப்படா” (யோவான்: 20:23) என்று இயேசு வாக்குறுதி அளித்துள்ளார். இதை நாம் பிறரோடுப் பகிர்ந்துகொள்ள வேண்டும். பெற்றோர் முறையான ஒப்புரவு அருளடையாளத்தில் அடிக்கடி பங்குபெறுவதின்வழி, பிள்ளைகளுக்கு முன்மாதிரியாக செயல்படவேண்டும். நீங்கள் நம்பிக்கையோடு இயேசுவிடம் மன்னிப்பைத் தேடுவதை உங்கள் பிள்ளைகள் பார்த்துக் கற்றுக்கொள்ளட்டும். இது ஒரு அழகான சாட்சியமிக்க வாழ்வு.

ஈஸ்டர் மக்களாகிய நாம், தெய்வீக இரக்கத்தை நம் வாழ்வில் சுமப்போம். ஆன்மா மற்றும் உடல் சார்ந்த இறை இரக்கத்தின் செயல்களைப் பிறருக்குச் செய்வதின்வழியாக, கடவுளின் இறை இரக்கத்தை அனைவருக்கும் கொண்டுசெல்ல முடியும். இறை இரக்கத்தின் பக்தியை பரப்பிடவும், வளர்த்திடவும் மரியாயின் சேனை இயக்கம் மிகப்பெரியக் கருவியாக உள்ளது. உங்கள் பங்கிலுள்ள மரியாயின் சேனைக்குழுவினரை நாடி இதைப் பற்றி மேலும் அறிந்துகொள்ளுங்கள். அவர்களின் ஒன்றுகூடலில் கலந்துகொள்ளுங்கள். அன்னை மரியாவின் முன்மாதிரியான வாழ்க்கையையும் பார்த்து ஆண்டவரின் அழைப்பை அறிந்துகொள்ளுங்கள். ✤


15 & 16 ஏப்ரல் 2023

# Newbec

NEW WAY OF BEING CHURCH

பாஸ்கா காலத்தின் இரண்டாம் ஞாயிறு
(இயேசுவின் இறைஇரக்கத்தின் ஞாயிறு)


### மண்ணுலகிற்கு உப்பும் உலகிற்கு ஒளியும்:

ஒன்றிப்பு (உள்ளடக்கியது) பங்கெடுப்பு, (படைப்பாற்றல்) மறைத்தூது (உறவுகளை இணைத்தல்)

மாதாந்திர கருப்பொருள்: **வாழ்வின் புதுமைத்தன்மை**

நிகழ்வின் நோக்கம்: **தவக்காலம் & ஈஸ்டர் காலம்**



# கடவுளின் தெய்வீக இரக்கத்தைத் தாங்குபவர்கள்

இயேசுவின் உயிர்த்தெழுதல் சீடர்களுக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது. அவர்கள் பயத்திலிருந்து மகிழ்ச்சிக்கும், தனிமையிலிருந்து தூதுரைக்கவும், ஒன்றும் இல்லாதவற்றிலிருந்து உடனிருப்புக்கும், அவநம்பிக்கையிலிருந்து நம்பிக்கைக்கும், வெறுமனே இருப்பதிலிருந்து புதுவாழ்வுக்கும் நகர்த்தப்பட்டனர்.